# கல்வி சிறந்த தமிழ்நாடு!

115
4-61

" கருப்பையா பி. ஏ."

T-2
N61

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வெளியீடு - 5 புத் மும்

முதற் பதிப்பு: மே 1961

விலை 20 ந. பை.

சாந்தி பிரஸ், சென்னை - 1.

# முன்னுரை

நாகரிகத்தின் அளவுகோலாக இன்று கல்வி விளங்குகிறது. செந்நெறிப் பாதையை அறியாது தவிக்கும் மக்களுக்கு அதுவே சிறந்த வழிகாட்டியாகும். கல்வி உள்ளொளியைப் பெருக்குவதுடன், உலகத்தையும் உணர்த்துகிறது. இதனுல்தான் நமது முன்னோர் அதற்கு ஏற்ற சிறப்பளித்துப் போற்றி வந்தனர். "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்று, அதனைத் தலையாய செல்வமாகக் கொண்டாடினர். அதனுல் அவர்கள் வாழ்வும் வளம்பெற்றிருந்தது. துறை தொறும் செறிந்த அவர்களது அறிவு, கடல் கடந்தும் புகழ் பரப்பியது.

ஆயின் இவையனைத்தும் தமிழ் ஏடுகளில் மட்டும் அடங்கிய புகழாயின. இடைக்காலத்தில் நமது நாட்டை இருள் கவ்விக் கொண்டது. அந்நியருக்கும் அடிமைப்பட்டோம். அதற்கு அடிப்படைக் காரணம் பல இருந்தபோதிலும், அப்பொழுது நிலவிய அறியாமையும் ஒன்று என்று கூறின் அது மிகையாகாது.

நாடு விடுதலை பெற்றதும், நாம் குடியரசாக இயங்க முடிவு செய்தோம். குடியாட்சியைத் தாங்கி நிற்கும் தூண்களில் கல்வி மிகவும் முக்கியமானதாகும். அதனுல்தான் நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் கல்விக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டது. இரண்டு திட்டங்களிலும் 16 கோடி ரூபாய்க்கு மேல் கல்வியின் வளர்ச்சிக்காகத் தமிழ் நாட்டில் செலவிடப்பட்டது. கடந்த பத்தாண்டுகளில் நமது தமிழகத்தில், நூற்றுக்கு பதினேரு பேர் வீதம் படித்தவர் தொகை பெருகியுள்ளது. இளஞ்சிறுர்களில் 33·80 லட்சம் பேர் இன்று பள்ளி செல்லுகின்றனர்; அவர்களுக்கு 26,750 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. சிற்றூராயினும் அங்கும் கூப்பிடு தொலைவில் ஒரு பள்ளி அமைந்திருப்பது மகத்தான சாதனையாகும்.

கல்வி பெருகுவதற்கு நம்முடைய தமிழ்நாட்டில் வறுமை ஒரு தடையில்லை என்பதை இலவசக் கல்வியும், இலவசப் பகலுணவுத் திட்டமும், இலவச அணி ஆடை (Uniform) வழங்கு திட்டமும்

பள்ளிச் சீரமைப்பு இயக்கமும் நிரூபித்துள்ளன. இதற்கு மக்களின் ஒத்துழைப்பும் நல்ல முறையில் கிடைத்து வருகிறது. இந்த விஷயத்தில் நாம் மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்கின்றோம். மற்றும், முதியோர் கல்வி, நூல்நிலைய இயக்கம் முதலானவற்றிலும் நாம் நல்ல முன்னேற்றம் எய்தியிருக்கிறோம்.

ஆசிரியரின் நிலை உயர்வதற்கு ஏற்ற அளவில், கல்வி வளர்ச்சியும் அமையும் என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. அதனால், அவர்களது சம்பளத்தைக் கணிசமான அளவுக்கு உயர்த்தியுள்ளது. மேலும், ஆசிரியருக்குப் பென்ஷன், பிராவிடண்ட் பண்டு, இன்சூரன்சு ஆகிய மூவகை நன்மைகளையும் அளிக்கும் திட்டமும் அமுலில் உள்ளது. **இந்தத் திட்டம் இந்தியாவில் மட்டுமல்லாது, ஆசியாவிலேயே நம் தமிழ் நாட்டில்தான் முதன்முதலாக அமுலாக்கப்பட்டுள்ளது.**

இத்தகைய சாதனைகளையெல்லாம் தொகுத்து விளக்கி, மக்கள் அறிந்துகொள்ளுமாறு செய்வது, நம் கடமையாகும். அதனைச் சிறப்புற நிறைவேற்றி வைக்கும் முறையில், திரு. கருப்பையா அவர்கள், "**கல்வி சிறந்த தமிழ்நாடு**" என்னும் இந்நூலை எழுதியுள்ளார். அவரது தமிழ்நடை எளிமையாகவும் இனிமையாகவும் இருக்கிறது. இதைத் தமிழ்ப் பெருமக்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். ஆசிரியரின் சீரிய தொண்டு வெற்றியடைய என் நல்வாழ்த்துக்கள்.

**சி. சுப்பிரமணியம்**
தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கண்கள் திறந்தன ! | ... | 7 |
| சோஷலிச முறை | ... | 11 |
| திட்டம் போட்டு முன்னேறுவோம் ! | ... | 13 |
| அகில இந்தியச் சாதனைகள் ! | ... | 17 |
| பலமான அஸ்திவாரம் | ... | 20 |
| சிமெண்ட் தளமும் கம்பீரமான மாளிகையும் | ... | 24 |
| தொழில் பெருகுது, தொழிலாளி வாழ்வான் ! | ... | 29 |
| அடுத்தாற்போல என்ன ? | ... | 33 |
| பகல் உணவுத் திட்டம் | ... | 38 |
| தாழ்ந்த தமிழகம் தலைநிமிர்ந்தது ! | ... | 43 |
| சீரமைப்பு | ... | 47 |
| நன்றியுள்ள தமிழகம் மறக்காது ! | ... | 50 |

# கண்கள் திறந்தன !

கல்யாண வீடு.

மணப்பெண், தோழியர் இருபுறமும் உடன்வர, எழிலே உருவெடுத்து வந்தாற் போல, மெல்ல நடந்து வருகிருள்.

தேன் நிலவை நினைவூட்டும் முகம்; அதில் பலாச்சுளை யைக் கவனப்படுத்தும் மென்மையான உதடுகள்; மாங்கனி போன்ற கன்னம்; பார்வையால் சிந்தையெல்லாம் தன்பால் ஈர்க்கும் நீலக்கரு விழிகள்; முல்லைச்சரமோ எனச் சொல்லத் தக்க பற்களின் வரிசை; 'இதன் விலை ஒரு கோடி' எனச் சொல்லாமல் காட்டும் புன்னகை.

"மணப் பெண்ணைச் சீக்கிரம் வரச் சொல்லுங்கள் நாழியாச்சு"—புரோகிதர் கட்டளை பிறப்பிக்கிருர்.

அவள், அந்த அமிர்த கலசம், வந்து அமருகிருள், மண மகனுக்குப் பக்கத்தில்.

பார்வையாளர் தம் கண்கள் மணமக்கள்பால் நோக்கு கின்றன. புரோகிதர் மந்திரம் ஓதுகிருர்.

பார்வையாளர்கள் இருந்த பக்கத்திலிருந்து 'கசமுச' வென்ற சப்தம் வருகிறது, முதலில் இலேசாக. வர வர ஒலி அதிகமாகிறது.

"என்னய்யா, அது?"—ஒரு பெரியவர் இடை வெட்டு கிருர்.

"என்னய்யாவா, கண் திறந்து மாப்பிள்ளையைப் பாருங்கள் ; இது தகுமா ?"

"என்ன சார், மாப்பிள்ளைக்கு ? ராஜாவாட்டம் இருக் கிருரே"

“ஐயோ! வெட்கக்கேடே! மாப்பிள்ளையின் முகத்தைப் பாருங்கள்......” பெரியவர் பதறுகிறார்.

“அடடா!”

“என்ன இருந்தாலும் இது கூடாதப்பா!”

“கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்து விட்டார்களே!”

“பெண்ணைப் பார்த்தீர்களா, ரதிபோல இருக்கிறாள்—இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவளைப் போய், இப்படி பாழுங்கிணற்றில் தள்ளியிருக்கிறார்களே!”

இப்படி, பலர் பேசுகின்றனர், இரக்கத்தோடு.

விஷயம் இதுதான்.

மணமகன், ஆள் வாட்டசாட்டமாகத்தான் இருக்கிறான்.

ஆனால்—

**அவனுக்குப் பார்வை கிடையாது; ஆம், அவனுடைய இரண்டு கண்களும், திறவாத கண்கள்!**

* * *

இன்னொரு காட்சி.

பெரியதொரு வீடு, மாளிகையென்றே சொல்லலாம். சகலவிதமான நவீன வசதிகளும் உள்ளன.

அதோ—

மூன்று விரல்களில் வைரமோதிரங்கள் பளபளக்க, கழுத்திலே புலிப்பற்களோடுகூடிய தங்கச்சங்கிலி கம்பீரமாக விளங்கிட, விலையுயர்ந்த உடைகளோடு, சாய்வு நாற்காலியில் ‘குஷாலாக’ அமர்ந்திருக்கிறாரே, அவர்தான் வீட்டுக்குரியவர்.

ஒருவர், அங்கு வந்து, அவருக்கு எதிராக உள்ள ஒரு நாற்காலியில், பய பக்தியுடன் அமருகிறார்.

“வணக்கம்”

“வணக்கம்”

“தாங்கள் அழைத்ததாகக் கேள்விப்பட்டேன்; ஓடோடி வந்தேன்.”

"ஆமாம், இந்தக் கடிதத்தைச் சற்றுப்படித்து, விளக்கம் சொல்ல வேண்டும்."

வந்தவரின் முகம் சுருங்குகிறது. "என்ன ?" என்பது போலப் பார்க்கிறார்.

"என்ன திகைக்கிறீர்கள் ?"

"ஒன்றுமில்லை...தங்களுக்கு...?

"படிக்கத் தெரியாது !"

"என்ன ?"

"படிக்கத் தெரியாது என்று சொன்னேன்"

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பார்களே !"

"அந்தக் கண்களற்ற குருடன் நான் !"—வருத்தம் பீறிட்டுக்கொண்டு வருகிறது.

"அட பாவமே, பங்களாவும், காரும், பூந்தோட்டமும், எழில் மனையாளும், பொன்நகைகளும், பேழையில் பணமும்......"

"...இவ்வளவு இருந்தும் என்ன பயன்? நான் அகக் குருடன். **என்னுடைய கண்கள் திறவாத கண்கள் !"**

வந்தவர் கண்களில் நீர் கசிகிறது.

* * *

இரண்டும் கற்பனைக் காட்சிகள்தாம் என்றாலும் அவை காட்டும் பாடங்கள், அவற்றின் படிப்பினைகள்—அவற்றை நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா ?

மணமகனும், பணக்காரரும் குருடர்கள்; இதில் சந்தேகமில்லை.

முன்னவர் புறக்கண்களை இழந்தவர்; பின்னவர் அகக் கண்களைப் பெறாதவர்.

மணமகனது கண்களைத் திறப்பது கடினம்.

**பணக்காரரின் கண்களைத் திறக்க முடியும்.**

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் பாரதம் விடுதலை பெற்றதும் காங்கிரசாட்சியை மக்கள் விரும்பி ஏற்றனர்.

காங்கிரசாட்சி, மேலே காட்டப்பட்ட பணக்காரர் போன்ருேரின் அகக்கண்களைத்திறக்க மருத்துவரை—திறமை மிக்க மருத்துவரை—அளித்தது.

அதன் பலனுக, **நாடு பூராவும் இலட்சக்கணக்கானவர்களின் கண்கள் திறந்தன**—'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்ற கவிஞனின் வாக்கு பலித்தது!

# சோஷலிச முறை

நாம் இருளில் கிடந்தோம், எந்தப்பக்கம் போக வேண்டும் என்பது தெரியாமல்.

காந்தி அடிகளார் சுதந்திர - விளக்கினை ஏற்றி வைத்து நாம் செல்ல வேண்டிய சோஷலிசப் பாதையைக் காட்டினர்; கடந்த பதின்மூன்ருண்டுகளாக, அவ்வழி நாம் செல்லுகிருேம்.

சோஷலிசப் பாதையா? அப்படி என்ருல் என்ன?

விளக்கம் தரப்பட வேண்டியது அவசியம்தான்.

அந்நியர் நம்மை ஆண்டபோது, மக்கள் நலம் பிரதானமானது, என்ற சிந்தனையே இல்லாமல், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவது மட்டுமே ஆட்சியாளரின் பணி என்ற கருத்தோடு செயல்பட்டார்கள்.

அதாவது, 'போலீசாட்சி' நடத்தினர்கள்.

காலம் மாறியது.

காங்கிரசுத் தலைவர்கள், மக்களின் விருப்பத்துக் கிணங்க, ஆட்சிப் பொறுப்பை ஏற்ருர்கள். ஒவ்வொரு துறையிலும் மக்களின் நலம் பெருக வேண்டும் என்ற பெருநோக்கோடு 'பொதுநல ஆட்சி' நடத்த ஆரம்பித்தார்கள்.

மக்களின் நலம் பெருக சோஷலிச வழியை நாம் தேர்ந்தெடுத்திருக்கிருேம். நமது **சோஷலிச வடிவ சமுதாயத்தில்** பணக்காரர், ஏழைகள்—உயர்ந்தவர், தாழ்ந்தவர்—என்ற பேதங்கள் இருக்காது. சலுகைகள் ஒரு சிலருக்கு மட்டும் உரியனவாக இராமல் எல்லோர்க்கும் சம அளவில் பகிர்ந்தளிக்கப்படும். நிலமும் தொழிலும் சமுதாயத்தின் உடைமை

களாக இருக்கும். எல்லோரும் ஒரு பொதுக்குறிக்கோளுக்காக பணிபுரிந்து, பலன்களைப் பகிர்ந்து கொள்வர்.

இத்தகையதொரு சமுதாயம் ஒரு நாளில் அல்லது ஒரு வருடத்தில் ஏற்பட்டு விடாது.

முதலாவதாக நாம் நிறைய செல்வத்தை உற்பத்தி செய்ய வேண்டும். அதே சமயத்தில், சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்களைச்சரி செய்யும் வகையில் செல்வத்தை விநியோகிக்க வேண்டும்.

செல்வ உற்பத்தி என்றால் காகித நோட்டு அடிப்பது அல்ல; நுண்ணறிவின் மூலமும் உழைப்பின் மூலமும் நாட்டின் உண்மையான செல்வத்தைப் பெருக்க வேண்டும்.

தொழிற்சாலைகள் பல துவங்க வேண்டும்; இயந்திரங்கள் பல அமைக்க வேண்டும்; புதிய பல கருவிகள் உண்டாக்க வேண்டும்; நம் நாட்டின் பெரும் தொழிலாம் விவசாயத்தில், திறமை மிகக் காட்டி, விளைச்சலைப் பெருக்க வேண்டும்; ஆலைகளும் அணைக்கட்டுகளும் மருத்துவ மனைகளும், மக்கள் மன்றங்களும், ஆராய்ச்சிச்சாலைகளும், அழகுக் கலைக்கூடங்களும் இன்னபிறவும் பெருக வேண்டும்.

மக்களிடையே அறியாமை விலகினால் ஒழிய இவை பெருக வழியில்லை.

அறியாமை விலக கல்வியறிவு பரவலாக, அழுத்தமாக, ஏற்பட வேண்டும்.

ஆம், கல்விச் செல்வம் என்ற அஸ்திவாரத்தின் மீது தான் பொருளாதாரவளம் என்ற மாளிகையை எழுப்ப வேண்டும்.

இதை உணர்ந்த காங்கிரசுத் தலைவர்கள் கல்வியறிவு மக்களிடையே வளர பலப்பல செய்து வருகிறார்கள்.

குறிப்பாக, தமிழகத்துக் காங்கிரசாட்சி இத்துறையில் இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கிறது, என்று பெருமையுடன் கூறலாம். அவ்வளவு சாதனைகள், பிரமிக்கத்தக்க வெற்றிகள், கல்வித்துறையில் காணப்பட்டுள்ளன.

# திட்டம் போட்டு முன்னேறுவோம்!

'கல்யாணம் பண்ணிப்பார்; வீட்டைக் கட்டிப்பார்' என்பது பழமொழி.

கல்யாணமானுலும் வீடுகட்டுவதானுலும் திட்ட மிட்டுச் செய்தால் சிக்கனமாகவும், சீராகவும்—வெற்றிகரமாகவும்—முடிக்கலாம் என்பது அனுபவத்தில் காணும் உண்மை.

குறிப்பிட்ட காலத்திற்குள், இன்னபடி செய்ய வேண்டும், இந்த முடிவுகளைப் பெறவேண்டும், அதற்கு இவையெல்லாம் தேவைப்படும், என்று வகுத்துக்கொண்டு செயல்படுவதுதான் திட்டமாகும்.

"ஐயோ! திட்டம் போடுகிருர்களே!!" என்று ஒரு கட்சி கூக்குரல் போடுகிறது. இந்தக் குரல் வயிற்றெரிச்சலில் பிறப்பது; வாய்மையிலே அல்ல. 'மற்றவர்களும் வாழ்ந்து விடலாமா?' என்ற எண்ணம்தான் அதற்குக் காரணம்.

திட்டம் போட்டு முன்னேறுவது என்பது புதுமையானது அன்று; சிலர் கூறுவது போல சிவப்புச்சட்டைக் காரர்களிடமிருந்து தட்டிப் பறித்துக் கொள்ளப்பட்டதும் அல்ல.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த பாரத அரசர்கள் திட்டமிட்டுப் படைபலத்தை—பண பலத்தை—பெருக்கிக் கொண்டனர்; அதன் காரணமாக மாற்ருர் மருள, மக்கள் மெச்ச, கோலோச்சினர், என்பதற்குச் சான்றுகள் உண்டு; வரலாறு தெரிந்தவர்கள் இதனை மறுக்க மாட்டார்கள்.

அவ்வளவு தூரம் போவானேன்? நம்முடைய சொந்த வாழ்க்கையையே எடுத்துக் கொள்ளுங்கள். 'இப்படி

செய்ய வேண்டும்' என்ற திட்டப்படி வாழாதவர்களின் வாழ்க்கை குழந்தைகள் கட்டும் மணல் வீடு போலத்தான் என்பதைக் கண்ணுலே பார்த்துக் கொண்டுதானே வருகி ரேம்?

"ஜம்புலிங்க முதலியாரைப் பார்த்தீர்களா? பத்து வருடங்களுக்கு முன்பு கஞ்சிக்கு வழியில்லாமல் இருந்தார். இன்று, இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்து!"

"எப்படி வந்தது? ஏதாவது 'லாட்டரி' போட்டியில் பரிசு பெற்ருரா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. முதலியார் கெட்டிக்காரர். எதைச் செய்தாலும் யோசித்து, எப்படி செய்தால் பயன் விளையும், என்று ஆராய்ந்து, செய்வார். பட்டாணி, கடலை விற்பனைக் கடையொன்று வைத்தார். தினசரி இவ்வளவு இலாபம் வரவேண்டும் என்று தீர்மானம் செய்து, அப்படியே சம்பாதிப்பார். மனிதர் மளமள வென்று முன்னேறி விட்டார். இன்றைக்கு மணிலாக் கொட்டை ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம்—இந்தியாவில் அவருக்கு இணை யாருமில்லை."

—இப்படி, சில வேளைகளில், ஊரார் பேசுவதைக் கேட்டிருப்பீர்கள். ஏன், நீங்களே கூட பேசியிருப்பீர்கள்.

ஜம்புலிங்க முதலியார் சாதாரண சிறு கடைக்காரராக இருந்த காலத்தில், ஏனோ தானோ வென்று இருக்கவில்லை. **திட்டமிட்டு உழைத்தார்.**

ஆகவே அன்று பட்டாணிக்கடை வைத்திருந்தவர் இன்று பறங்கியருக்கு மணிலாக் கொட்டை ஏற்றுமதி செய் கிருர்.

ஆம்; ஜம்புலிங்க முதலியார்களின் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணம் 'திட்டமிடும் மனப்பான்மை' தான்.

திட்டம் இல்லாத செயல் கலாய் இல்லாத பாத்திரம் போல!

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்' என்ருன் கவிஞன்.

சரி, என்று உடனே எட்டுப் படகுகளிலே ஏறிக்

கொண்டு, எட்டுத் திக்குகளில் போய்விடுவதா ? இலட்சியம் நிறைவேற அதுவல்ல முறை.

எப்படி போவது, எதில் போவது, யார் போவது, எவ்வாறு சென்று எட்டுத் திக்குகளிலுள்ள வளங்களோடு மீளுவது—என்பதற்கெல்லாம் 'திட்டம்' போட வேண்டும்.

ஒரே சமயத்தில் எல்லா இடங்களுக்கும்—எட்டுத்திக்குகளுக்கும்—செல்ல ஆட்கள் இல்லை; மரக்கலங்கள் இல்லை. எனவே, கோடையிலே தெற்கு, குளிர் காலத்தில் வடக்கு, இடைக் காலத்தில் மேற்கு என்று பிரித்துக்கொண்டு, அதன்படி ஆட்களை அனுப்பினால் பலன் விளையும்.

ஆம்; பாரதியின் "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்" என்ற இலட்சியத்தைத் தொட உதவும் சாதனம்தான் திட்டம்.

திட்டம் இல்லையேல் இலட்சிய நிறைவு ஏற்படாது.

காங்கிரசுத் தலைவர்கள், குறிப்பாக தலைவர் நேரு போன்றோர், சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே, விடுதலை பெற்ற இந்தியாவில் திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே பொருளாதார முன்னேற்றம்—வளமான வாழ்வு—சாய்ந்து போன மக்களிடையே சமதர்மம்—காண முடியும் என்று வற்புறுத்தி வந்தார்கள்.

—இதனை எவரும் இல்லையென்று மறுக்க முடியாது.

சுதந்திரம் வந்து காங்கிரசுத் தலைவர்கள், மக்களது விருப்பத்திற் கிணங்க, ஆட்சிப் பொறுப்பேற்ற பின், காந்தி அடிகளாரின் கட்டளைப்படி, ஏழை எளியவர்களின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும் என்ற உன்னதமான—உயர்ந்த—இலட்சியம் நிறைவேற ஐந்தாண்டுத் திட்டங்கள், ஒன்றன்பின் ஒன்றாக வகுத்துச் செயல்பட்டு வருகின்றனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951-52ல் தொடங்கி 1955-56ல் முடிவு பெற்றது. இரண்டாவது திட்டம் 1956-57ல் தொடங்கி 1960-61ல், அதாவது இன்னும் சில மாதங்களில், முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.

கல்வித்துறையில்—

அகில இந்திய அடிப்படையில், இந்த இரண்டு திட்டங்களிலும், காங்கிரசுத் தலைவர்கள் புரிந்துள்ள சாதனைகளை—அடைந்துள்ள வெற்றிகளை—பார்ப்போம்.

# அகில இந்தியச் சாதனைகள்

வாசகர்கள் மன்னிக்க வேண்டும். 'என்னடா, இது, புள்ளி விவரங்கள் தந்து 'போர்' அடிக்க ஆரம்பித்து விட்டானே, என்று கருதக் கூடாது; சாதனைகள் பற்றிய பட்டியலுக்குப் புள்ளி விவரங்கள் மிகஅவசியம். சரியானபடி சேகரிக்கப்படும் புள்ளி விவரங்கள்சிறந்த—மறுக்க வியலாத—பல உண்மைகளைத் தெளிவாகக் காட்டும்.

'அப்படி, என்னதான் புள்ளி விவரங்கள் வைத்துக் கொண்டிருக்கிறாய்? காட்டேன், பார்ப்போம்' என்கிறீர்களா?

இதோ தருகிறேன், பாருங்கள், படியுங்கள், மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்—

| எண் | விவரம் | முதல் திட்டத்திற்கு முன்பு | முதல் திட்டத்தில் | இரண்டாவது திட்டத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | பள்ளி மாணவர்கள் தொகை | 2 கோடி 35 லட்சம் | 3 கோடி 15 லட்சம் | 4 கோடி 11 லட்சம் |
| 2. | ஆரம்பப்பள்ளிகள் | 2,09,700 | 2,78,100 | 3,54,900 |
| 3, | நடுத்தரப்பளளிகள் | 13,600 | 21,700 | 30,000 |
| 4. | உயர்நிலைப்பள்ளிகள் | 7,300 | 10,800 | 16,000 |
| 5. | என்ஜினியரிங் கல்வி: பட்டப்படிப்பு மாணவர்கள் தொகை | 4119 | 5,888 | 13,165 |
| 6. | என்ஜினியரிங் கல்வி: 'டிப்ளமா' படிப்புமாணவர்கள் தொகை | 5903 | 10484 | 24,020 |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 7. | விவசாயத்துறை : பட்டப்படிப்புமாணவர்கள் தொகை | 1,060 | 1989 | 4500 |
| 8. | வைத்தியக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தொகை | 2854 | 3655 | 4790 |

—கொஞ்சம் ஆச்சரியப்படுகிறீர்கள். என்றாலும் 'பரந்து கிடக்கும் பாரத தேசத்தில் இவ்வளவு போதுமா?' என்று கேட்கிறீர்கள். உண்மைதான். அதற்காகத்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் **பள்ளி மாணவர்கள் தொகையை 6 கோடி 48 லட்சமாக** உயர்த்தப்போகிறார்கள் நமதருமை காங்கிரசுத் தலைவர்கள்.

அதுமட்டுமா ?

மூன்றாவது திட்ட முடிவில் **ஐந்து இலட்சம் ஆரம்பப்பள்ளிகள் இருக்கும்**; 45,000 நடுத்தரப்பள்ளிகளும்; 18,000 உயர்நிலைப்பள்ளிகளும் இருக்கும்.

என்ஜினியரிங் கல்வி பட்டப்படிப்பு மாணவர் தொகை 18,500 ஆகவும் 'டிப்ளமா' படிப்பு மாணவர் எண்ணிக்கை 34,000 ஆகவும் உயரும்.

விவசாயத்துறையில் பட்டப்படிப்பு மாணவர்கள் மூன்றாவது திட்டம் முடியும்போது 6000 பேர்களாக உயர்ந்திருப்பார்கள்.

—இவற்றையெல்லாம் பாருங்கள். மெல்ல, கருத்தூன்றிக் கவனியுங்கள்.

காங்கிரசாரின் ஆட்சியில், குருடர்கள் கண்பெற்று வருகிறார்கள்—**அகக்கண்கள் திறந்து வருகின்றன**—என்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்கள் அல்லவா !

'ஏ, கருப்பையா, நீ கெட்டிக்காரனப்பா, கல்வித்துறையில் முன்னேற்றம் காணீர் என்று சொல்லிவிட்டு அகில இந்தியக் கணக்கைக் காட்டுகிறாயே, அது போதுமா ? என்

னமோ, தமிழக காங்கிரசாட்சி இந்தியாவிலேயே முதலிடம் பெற்றிருப்பதாக கீர்த்தி மொழி பகன்றுயே, அது குறித்து ஒன்றுமே சொல்லவில்லையே ' என்கிறீர்களா ?

சந்தேகம் வேண்டாம், நண்பர்களே ; அடுத்தபடியாக தமிழகத்துத் தலைவர்களின் திறல் பற்றித்தான் பார்க்கப் போகின்ருேம்.

அதற்கு முன்னுரை போல, அகில இந்திய ரீதியிலே காங்கிரசாரின் சாதனைகள் என்ன என்று விளக்கினேன், அவற்றைத் தெரிந்து கொள்ளுவதோடு கூட தமிழக முன்னேற்றத்தின் அளவினை, அகில இந்தியச் சாதனைகளோடு ஒப்பிட்டு உண்மை உணரவும் இவை உதவுமல்லவா, அதற்காகத்தான் !

# பலமான அஸ்திவாரம்

## (ஆரம்பக் கல்வி)

சென்னை மாநிலக்கல்லூரி; ஆங்கிலப் பேராசிரியர் எலியட்டு உள்ளே நுழைகிருர், பி. ஏ. வகுப்புக்கு, ஆங்கிலக் கவிதை போதிப்பதற்காக.

வளர்ந்த இளைஞர்களுக்கிடையே, ஒரு சிறுவன் இருப்பதைப் பார்க்கிருர். குள்ளமான, ஒல்லியான, அந்தச் சிறியவன் தவறுதலாக ஒரு வேளை அங்கு வந்து விட்டானே என்ற ஐயம் ஏற்படுகிறது அவருக்கு.

"தம்பீ! நீ பி. ஏ. வகுப்பைச் சேர்ந்தவன்தானு?"

"ஆமாம், சார்"

"உன்னைப் பார்த்தால் மிகவும் சிறியவனுகத் தோன்றுகிறதே; உனது வயது என்னப்பா?"

"பதின்மூன்று!"

பேராசிரியருக்கு ஒரே வியப்பு!

"பதின்மூன்றுதானு? நம்பவே முடியவில்லையே! ஆமாம், நீ எப். ஏ. எங்கு படித்தாய், எப்போது தேறினுய்?"

"விசாகப்பட்டினத்தில் படித்தேன். சென்ற வருடம் தான் தேறினேன்!"

"உன் பெயர் என்ன?"

"சி. வி. ராமன்!"

—விஞ்ஞான உலகத்தில் தமக்கென ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று விட்ட சர். சி. வி. ராமன் அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவம்தான் இது.

பதின்மூன்ருவது வயதில் பி. ஏ. படிக்கத் தொடங்கினுர் இராமன்

பன்னிரண்டாவது வயதில் கவிதை மழை பொழிந்தார் சுப்பிரமணிய பாரதியார்; எவ்வளவோ தடைகள் ஏற்பட்டாலும் இருபத்தி மூன்ருவது வயதில் ஐ. சி. எஸ். (இங்கிலாந்து) பரீட்சையில் தேறினர் சுபாஷ் சந்திரபோஸ்; தமது பெயரைத் தூய தமிழில் ' பரிதிமாற் கலைஞன் ' என்றழைத்துக் கொண்ட வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவரது பத்தொன்பதாம் வயதில் தமிழில் ஆழ்ந்த புலமை பெற்று, ' மாலா பஞ்சகம் ' என்ற சிறந்த நூலை எழுதினர்; இருபதாவது வயதில் ஆங்கிலேயரைவிட அற்புதத்திறமையோடு ஆங்கிலம் பேசும் ஆற்றலைப் பெற்ருர் சி. பி. ராமசாமி அய்யர்!

இப்போது பிரதம நீதிபதியாக, நமது மாநிலத்தில் இருக்கிருரே திருவாளர் இராசமன்னர் அவர்கள், அவருடைய வரலாறு தெரியுமா ?

மூன்ரும் படிவம் வரை சென்னையிலுள்ள தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு, பிறகு பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு உட்கார போதிய வயது ஆகவில்லை என்று மூன்று வருஷங்களுக்கு ஆருவது படிவத்திலேயே இருந்தார்!

இன்னும் ஒரே ஒரு உதாரணம்.

உலகிலேயே தலை சிறந்த ஐந்து பெரும் சொற்பொழிவாளர்களில் ஒருவர் என்று பெயர் பெற்றிருந்தவரும், காந்தி அடிகளாலேயே பாராட்டப்பட்டவருமான மகாகனம் சீனிவாச சாஸ்திரியார்—இவரது பிரசங்க வன்மையைக் கண்டு வியந்த அனைவரும் இவரை ' வெள்ளி நாக்கு ' படைத்தவர் என்ருர்கள்—பால் மணம் மாருத வயதில் 'இண்டரி'ல் மாநிலத்திலேயே முதன்மையான மதிப்பெண்கள் பெற்றுத் தேறினர்.

சாஸ்திரியாரும், சி. வி. ராமனும், இராசமன்னரும், சி. பி. இராமசாமி அய்யரும் அவர்களைப் போன்ற மற்ற

பெரியார்களும் "இளமையில் கல்" என்ற மூதுரையைக் கடைப் பிடித்து வெற்றி கண்டவர்கள்.

இளம் வயதில் கல்வி பயில வேண்டும். அப்போதுதான் நன்ருகப் படிக்க முடியும்; நாட்டிற்கும் பல சி. வி. ராமன்கள் கிடைப்பார்கள்.

காங்கிரசாட்சி, இளமையில் கற்க வேண்டும், என்ற இலட்சியத்தை ஒப்புக் கொண்டிருக்கிறது.

அதற்காக இரண்டு முக்கிய நடவடிக்கைகளைக் காங்கிரசுத் தலைவர்கள் எடுத்து வருகிருர்கள்.

ஒன்று, **குழந்தைகளை நிறைய அளவில்** பள்ளிக் கூடங்களுக்கு வரும்படி செய்தல்;

இரண்டு, அதற்கேற்ற முறையில் **நிறைய பள்ளிக் கூடங்களைத்** துவக்குதல்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் போடுவதற்கு முன்பாக இருந்த நிலைமையைப் புரிந்து கொண்டால்தான் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியின் வேகம் விளங்கும்.

1950-51ல், அதாவது முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முந்திய ஆண்டில், நமது மாநிலத்தில் 15,800 ஆரம்பப் பள்ளிகள் இருந்தன. 6 வயதிலிருந்து 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 45 சதவிகிதத்தினரே பள்ளிகளுக்குச் சென்று வந்தார்கள்.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபின் நிலைமை வெகுவாக மாறிவிட்டது. **இப்போது நமது மாநிலத்தில் 26,700 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன**; 6-11 வயதுக் குழந்தைகளில் 75 சதவிகிதத்தினர் பள்ளிகளுக்குச் செல்கிருர்கள்!

முதல் திட்டத்தில் சுமார் 500 மக்கள் கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் நிறுவ வழி செய்யப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் 300 ஜனத்தொகைக்கு மேலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக் கூடம் அமைக்கப்பட்டுவிடும்.

பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினுல்மட்டும் போதாது, நமது நாட்டுக் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத்தரப்படும் முறையையே மாற்றி அமைக்க வேண்டும் என்று காந்தி அடிகள் கூறினுர். வெறும் புத்தகப் புழுவாய் இருப்பதைவிட தொழில் துறைகளிலும் குழந்தைகளின் கவனத்தைத் திருப்புவதில் மிக்க இலாபமுண்டு என்று அவர் நம்பினுர். காந்தி அடிகளாரின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் **ஆதாரக் கல்வி முறை** அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இதற்காக புதிய பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கவேண்டாம். ஆரம்பப் பள்ளிகளைச் சிறிது சிறிதாக ஆதாரப் பள்ளிகளாக மாற்றிவிடலாம். அதுமட்டுமின்றித் தொடக்கக் கல்வி முறையையே கொஞ்சங்கொஞ்சமாக ஆதாரக் கல்வி முறைக்கு மாற்றிவிடலாம்.

அரசினரால் அமைக்கப்பட்ட 'ஆதாரக்கல்வி அட்ஹாக் கமிட்டி' சமர்ப்பித்த அறிக்கைப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன; இரண்டாவது திட்டத்தில் ரூ. 78.31 லட்சம் ஆதாரக்கல்வி அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டது.

தொடக்கப்பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றுதல், சாதாரண பயிற்சிப் பள்ளிகளை ஆதாரப்பயிற்சிப் பள்ளிகளாக மாற்றுதல், புதிய ஆதாரப்பயிற்சிப் பள்ளிகள் துவங்குதல், மாணவர்களின் கைவேலைத்திறமையை மேற்பார்வையிடவும் அபிவிருத்திசெய்யவும் கைப்பணி ஆசிரியர்களை நியமித்தல், முதலிய செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

முதல் ஐந்தாண்டுத்திட்ட ஆரம்பத்தில் 237 ஆதாரப் பள்ளிகளே நமது மாநிலத்தில் இருந்தன. முதல் திட்டம் முடிவடைந்தபோது அவை 1886 ஆகப் பெருகின. இரண்டாவது திட்டத்தில் 2100 புதிய பள்ளிகள் இவற்றுடன் சேர்ந்தன.

# சிமெண்ட் தளமும் கம்பீரமான மாளிகையும்

*[உயர் நிலைக்கல்வியும், கழகக் கல்வியும்]*

என் நண்பர் ஒருவர், எழுதிக்கொண்டு வரும்போது உடனிருந்தவர், ஒரு குறுக்குக் கேள்வியை எழுப்பினர் :

"ஏன் சார், 300 ஜனத்தொகைக்கு மேலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டாவது திட்டத்திற்குள் பள்ளிக்கூடம் அமைக்கப்பட்டுவிடும் என்கிறீர்களே. இவை எல்லாம் ஆரம்பப் பள்ளிகள்தானே ?"

"ஆமாம்."

"அப்படியானல் இந்தப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளும் நிறைய பெருகியிருக்கிருர்கள் அல்லவா ?"

"அதுதான் சொன்னேனே. இப்போது தமிழகத்தில் 26,700 ஆரம்பப்பள்ளிகள் இருக்கின்றன. 6 வயது முதல் 11 வயது வரை உள்ள தமிழகக் குழந்தைகளில் 75 சதவிகிதத்தினர் இவற்றில் படித்து வருகிருர்கள்—இதைத்தான் ஏற்கெனவே தெரிவித்தேனே !"

"அங்குதான் சார், சந்தேகம். இத்தனை குழந்தைகளும் ஆரம்பப் படிப்பை முடித்துவிடுகிருர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் அனைவரும் படிப்பதற்கு ஏற்ப **நிறைய அளவில் உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் வேண்டுமே**; அதற்கென்ன செய்திருக்கிருர்கள் உங்கள் காங்கிரசுத் தலைவர்கள் ?"

"ஒரு சிறு திருத்தம். காங்கிரசுத் தலைவர்கள் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தாருக்காக, அல்லது பகுதிக்காரர்களுக்

காக அல்ல. அவர்கள் நாட்டிலுள்ள எல்லோருக்கும்தான் தொண்டு செய்கிருர்கள்."

"ஒப்புக்கொள்கிறேன். என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்—என்ன செய்திருக்கிருர்கள் நமது காங்கிரசுத் தலைவர்கள் ?"

"உங்கள் கேள்வி நியாயமானதுதான். எட்டாவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்பு வரையிலுள்ள வகுப்பு களில் சேர்க்கப்படவேண்டிய அதிகப்படி மாணவர்களின் தொகை, 1960-61ல் நான்காம் படிவம் முதல் ஆரும் படிவம் வரையிலுள்ள 2,68,000 மாணவர்கள் எண்ணிக்கையில் 50 சத விகிதமாகும். அதாவது சுமார் **ஒரு லட்சத்து முப்பதிுயிரம் பேரைப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.** காங்கிரசுத் தலைவர்கள் இந்தப் பிரச்னையை உணர்ந்திருக்கிருர்கள். அதனுல்தான் ஐந்தாண்டுத் திட்டங் களில் உயர்நிலைக் கல்வி வளர்ச்சிக்கு உரிய இடம் தரப்பட் டது" என்று சொல்லி அவருக்கு விளக்கமாக, உயர்நிலைக் கல்வி அபிவிருத்திக்காக செய்யப்பட்டிருப்பதை யெல்லாம் எடுத்துரைத்தேன்.

நண்பருக்குமட்டும் சொல்லிவிட்டால் போதுமா ? உங்க ளுக்குச் சொல்ல வேண்டாமா ?

காங்கிரசு அரசினர் தமிழகத்தைப் பொறுத்தவரையில், உயர்நிலைக் கல்வி அபிவிருத்திக்காக இரண்டு காரியங்களைச் செய்தனர். ஒரு பக்கம் புதிது புதிதாகப் பள்ளிகள் ஆரம் பிக்கப்பட்டன ; அவற்றில் 70 சத விகிதம் கிராமப் புறங் களில் அமைக்கப்பட்டதால் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. முதல் திட்டம் தொடங்குவதற்கு முன்பாக நமது மாநிலத்தில் 637 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. முதல் திட்டத்தின் பலனுக அவை 814 ஆகப் பெருகின ; நான்கு லட்சத்து முப்பதினுயிரம் மாணவர்கள் அவற்றில் படித்தார்கள்.

இரண்டாவது திட்டத்தில் 450 புதிய உயர்நிலைப் பள்ளி

கள் தொடங்குவதுடன் 18,000 மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்படுகிருர்கள்.

நம்முடைய கல்வி அமைப்பில் உயர்நிலைக்கல்வி முக்கிய மான இடம் வகிக்கிறது என்று ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஆரம்பக் கல்வியை அஸ்திவாரம் என்று சொன்னுல் உயர் நிலைக் கல்வியை 'சிமெண்ட்தளம்' என்று அழைக்கலாம். ஏனெனில் இந்தக் கல்வியை முடித்த பின்னர்தான் மாணவர் கள் தங்கள் விருப்பம் போல் வேறு வேறு பாடத்திட்டங்களை எடுத்துக்கொள்ள முடிகிறது.

இதனை நன்குணர்ந்த காங்கிரசுத்தலைவர்கள் பள்ளிகளை அதிகப்படுத்துவதோடுகூட, **உயர்நிலைக் கல்வியின் தரம் உயர** வும் பல நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

ஆசிரியர்களுக்குத் திருப்திகரமான சம்பளங்களை அதிகப்படுத்தி வழங்கினுர்கள்;

11 வயது முதல் 17 வயதுவரையிலுள்ள மாணவர் களைப் பள்ளியில் அதிகமாகச் சேர்ப்பதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, இரண்டாவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 552 புதிய வகுப்புகள் ஆரம்பித்தார் கள்; 22,000 மாணவர்கள் அதன் காரணமாக சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அப்பணி மேலும் தொடரப்பட்டது. இத் திட்டத்திற்கு மத்திய அரசினர் மானியம் 50 சதவிகிதம் உண்டு.

தொழில் முறையை மாணவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பொருட்டும், தொழில் செய்வதற்கு முன் அதைப் பற்றித் தெரிந்துகொள்ளுவதற்கும் உயர்நிலைப் பள்ளிகளில் பல்காரிய பாடத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் முக்கியத்துவத்தை விளக்கத் தேவையில்லை. "வெறும் எஸ். எஸ். எல். சி. தானு?" என்று சொல்லி முகத்தைச் சுளிக்க இனி முதலாளிமார்களால் முடியாது. "பையன் இந்தத் தொழில் முறையைப் பயின்றிருக்கிருன், வேண்டு மானுல் பரீட்சை செய்யுங்கள்" என்று சொல்லும்போது

அந்தத் தொழிலை நடத்துபவர்கள் தாராளமாக வேலை கொடுக்க முன்வருவார்கள். எனவே இந்தத் திட்டத்தின் அடிப்படையில் காங்கிரசு அரசினர் தீவிரமாகச் செயல்பட்டனர். உயர்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. முதல் திட்டத்தில் 54 பள்ளிக்கூடங்களில் 38 பாட முறைத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன; இரண்டாவது திட்டத்தில் 286 பாடமுறைகள் ஏற்படுத்தப் பட்டன. இத்திட்டத்திற்கு மத்திய அரசினர் 60 சதவிகிதம் மானியம் அளிக்கிறார்கள்.

விஞ்ஞானம் மற்றும் அது சம்பந்தமான முக்கிய பாடங்களைக் கற்பிப்பதைச் சீர்திருத்துவதற்கு ஒரு திட்டம் வகுக்கப் பட்டது. சீர்திருந்திய முறைகள் இப்போது பல பள்ளிகளில் புகுத்தப்பட்டுள்ளன.

நம்முடைய மாணவர்கள், அநேகமாக, ஏழைகள். ஷேக்ஸ்பியரையும் கம்பனையும் மிலிட்டனையும் காளிதாசனையும் விலை கொடுத்து வாங்கிப்படித்து அறிவுபெற அவர்களது பொருளாதார நிலை இடந்தராது. இதை உணர்ந்த காங்கிரசுத் தலைவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் **நூல் நிலையங்களை** அபிவிருத்தி செய்வதிலும் அக்கறை காட்டி வருகின்றனர். சில பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு நூல் நிலைய அபிவிருத்திக்காக மானியங்கள் கொடுக்கப்படுகின்றன. 240 பள்ளிக்கூடங்கள் இத்திட்டத்தின்படி உதவி பெறுகின்றன.

உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் தொழில் திறமையை அபிவிருத்தி செய்ய, பல பள்ளிகளில் கைப்பணி கற்பிப்பதற்காக நிதி உதவி அளிக்கப்படுகிறது.

* * *

ஆரம்பக்கல்வி என்கிற அஸ்திவாரத்தின் மீது, உயர்நிலைக் கல்வி என்ற சிமெண்ட் தளத்தின் மீது, **பல்கலைக் கழகக் கல்வி** என்ற விசாலமான—கம்பீரமான—மாளிகை கவினுற எழுப்பப் படுகிறது.

மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள வேறுபாட்டினை

அரிஸ்டாடில் விளக்கினர். இந்த வேறுபாட்டினைப் பழுதற உணர்ந்திடவும், சிந்தனைசக்தி பெருகவும், மனித இதயம்பண் படவும் பல்கலைக்கழகக் கல்வி பெருத்த உதவி செய்கிறது.

முதலாவது திட்டம் தொடங்குவதற்கு முன்பு நமது மாநிலத்தில் 36 கல்லூரிகள் இருந்தன. முதல் திட்டத்தில் பல்கலைக் கழகக் கல்வியை அபிவிருத்திசெய்ய பல நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன. அதன் பயனாக 17 புதிய கல்லூரி கள் ஆரம்பிக்கப்பட்டன; 12,557 மாணவர்கள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இங்கு ஒரு ருசிகரமான தகவல்--

"பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரி னில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்று பாரதியாரின் புது மைப் பெண் கம்பீரமாகப் பாடுகிருள் அல்லவா. அதுவெறும் பாட்டாக இல்லாமல், காங்கிரசார் ஆட்சியில் செயலளவில் நடப்பதைக்கண்ணுலேபார்க்கலாம். 1950-51ல் நமதுமாநிலத் தில் 2985 மாணவிகள்தான் கல்லூரிகளில் படித்துகொண் டிருந்தார்கள். முதல் திட்ட இறுதியில் இந்த எண்ணிக்கை 5,363-ஆக—அதாவது எண்பதுசதவிகிதம் உயர்ந்துவிட்டது!

இரண்டாவது திட்டத்தில் பல்கலைக்கழகக் கல்வி அபி விருத்தி வேலைகள் மேலும் பெருகின. பல்கலைக் கழக மானி யக் கமிஷன் அபிவிருத்தித்திட்டங்களுக்கு ஆகும் செலவில் ஒரு பகுதியைக் கொடுக்கிறது. அரசினர் ஒரு பகுதியைத் தருகிருர்கள். இம் முறையில் ரூ. 15 லட்சம் அரசினர் செல விடுகிருர்கள்.

1957-58 ஆண்டிலிருந்து நமது மாநிலத்தில் மூன்ருண் டுப் பட்டப் படிப்பு முறை ஏற்படுத்தப்பட்டது. இதனுல் ஏற் படும் கூடுதல் செலவில் ஒரு பங்கை அரசினர் ஏற்கிருர்கள்.

முதல் திட்டக்கால முடிவில் எத்தனை கல்லூரிகள் இருந்தன வென்பதை மேலே குறிப்பிட்டேன். இரண்டாவது திட்டத்தில் அவை மேலும் பெருகின. 6 கல்லூரிகள் புதிதாகத் துவக்கப் பட்டுள்ளன.

# தொழில் பெருகுது, தொழிலாளி வாழ்வான்

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு ;
நல்ல காலம் வருகுது ; நல்ல காலம் வருகுது ;
சாதிகள் சேருது ; சண்டைகள் தொலையுது;
சொல்லடி, சொல்லடி, சக்தி, மாகாளீ!
வேதபுரத் தாருக்கு நல்ல குறிசொல்லு.
வேத புரத்திலே வியாபாரம் பெருகுது :
தொழில் பெருகுது ; தொழிலாளி வாழ்வான் ;
சாத்திரம் வளருது ; சூத்திரம் தெரியுது ,
யந்திரம் பெருகுது ; தந்திரம் வளருது ;
மந்திர மெல்லாம் வளருது, வளருது !

கவிஞனுக்குத்தான் எவ்வளவு நம்பிக்கை, சுதந்திரம் வரும், காங்கிரசுத் தலைவர்கள் ஆளுவார்கள், தொழில் வளம்-இயந்திர சக்தி—பெருகும், என்பதில் !

அமரனாகி விட்ட கவிஞனின் வாக்குப் பொய்க்கவில்லை

கண்களைத் திறக்கும் பணியில்—கல்வி வளர்ச்சியில்—காங்கிரசார் ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிட்டேனே. அகக் கண்களைத் திறந்து, அவற்றிலே **தொழில் திறமை** என்றஒளியையும் பரவிடச் செய்கின்றனர் காங்கிரசுத் தலைவர்கள் ; ஆம், நமது சார்பில் நாடாளும் நாயகர்கள்தான் இந்த நற்பணியைச் செய்து வருகிறார்கள்.

பொறிஇயல், மருத்துவம், கலைகள், சட்டம், கால்நடை மருத்துவம், வேளாண்மை, வியாபாரம், காட்டுவளம்,தொழில் துறை—இவை அனைத்திலும் மாணவர் பயிற்சி பெற வேண்டும். அப்போதுதான் அந்தந்தத்துறையில் வளங் காண முடியும்.

கோயம்புத்தூரில் **வேளாண்மைக் கல்லூரி** இருக்கிறது; அதில், இரண்டாவது திட்டத்தில் மாணவர்கள் எண்ணிக்கையை 108-லிருந்து 160 ஆக அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 40 மாணவர் படிக்கும் வகையில் வேளாண்மைக் கல்லூரி ஒன்றைத் துவக்கினார்கள். கோயம்புத்தூரில் பட்ட மேற்படிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் **கால்நடை மருத்துவக் கல்லூரி** இருக்கிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் அங்கு மாணவர்கள் எண்ணிக்கையை 80லிருந்து 120 ஆக அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஸ்டாக்மன் படிப்பில் 55 லிருந்து 200 ஆக மாணவர் எண்ணிக்கை கூடியிருக்கிறது.

நமது மாநிலத்தில் தற்போது 9 **பொறியியல் கல்லூரிகள்** உள்ளன. அவற்றில் 2 கல்லூரிகள் இரண்டாவது திட்டத்தில் துவக்கப்பட்டவை. இவற்றில் முதல் திட்ட முடிவில் 662 மாணவர்களும் இரண்டாவது திட்ட இறுதியில் 1157 மாணவர்களும் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

தமிழ் நாட்டில் 23 **பலதொழில் பயிற்சிப் பள்ளிகள்** இப்போது உள்ளன. இவற்றில் 14 **பள்ளிகள் இரண்டாவது திட்டத்தில் துவக்கப்பட்டன.** முதல் திட்டத்தின் பயனாக 822 மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டார்கள். இரண்டாவது திட்டத்தில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டவர்களின் தொகை இன்னும் அதிகமாயிற்று. 2910 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்ட மாணவர்கள்.

திருச்சிராப்பள்ளி, ஆவடி, செட்டிநாடு, பொள்ளாச்சி, நாகப்பட்டினம், விருதுநகர், தாழையூத்து, சேலம், சிதம்பரம், நாகர்கோயில், காஞ்சீபுரம், வட ஆற்காடு, (சென்னை), சீர்காழி, குடியாத்தம் ஆகிய இடங்களில், மேலே குறிப்பிட்டபடி, புதிய பல தொழில் பயிற்சிப் பள்ளிகள் துவக்கப்பட்டன.

இதன் காரணமாக முதல் திட்டக்காலத்தில் இருந்ததை

விட இரண்டாவது திட்டக்கால முடிவில் **புதிதாகச் சேர்க்கப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 253 சத விகிதம் அதிகரித்திருக் கிறது.**

முதல் திட்டத்தில் ஒன்றும், இரண்டாவது திட்டத்தில் இரண்டும், ஆக மூன்று **மருத்துவக் கல்லூரிகள்** கூடுதலாகத் துவக்கப்பட்டுள்ளன. முதல் திட்டத்தில் 75 மாணவர்களும் இரண்டாவது திட்டத்தில் 240 மாணவர்களும் கூடுதலாக மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டார்கள்.

இரண்டாவது திட்டக்காலத்தில் 20 மருத்துவ அதிகாரி கள் இங்கிலாந்துக்குச் சென்று மேற்படிப்புப் பயிற்சி பெறு வதற்காக வழி செய்யப்பட்டது.

1950-51ல் ஏழு **ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்** இருந்தன. 469 பேர் படித்துக் கொண்டிருந்தனர். 1955-56 வாக்கில் புதிதாக 6 கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டாம் திட்டத்தில் மேலும் 6 கல்லூரிகள் துவக்கப்பட்டன. அதன் பயனாக மாணவர் எண்ணிக்கை 1471 ஆக உயர்ந்தது.

முதல் திட்டக் கால முடிவுவரை ஒரு **உடற்பயிற்சிக் கல்லூரி** மட்டுமே இருந்தது. இண்டாவது திட்டத்தில் காரைக் குடி, பெரியநாயக்கன் பாளையம் ஆகிய இடங்களில் இரண்டு கல்லூரிகள் புதிதாகத் துவக்கப்பட்டன.

பொதுவாக, கடந்த பத்தாண்டுகளில் தொழில் நுட்ப அறிவையும், தொழில் திறமையையும் வளர்ப்பதற்குத் தொழில் நுட்பக் கல்வித்துறையில் பல திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. அதன் பயனாக இப்போது வருடம் ஒன்றுக்கு 1,157 மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 'பாலிடெக்னிக்' பள்ளிகளில் வருடம் ஒன்றுக்கு 2,910 மாணவர்கள் சேர இடவசதி செய் யப்பட்டுள்ளது.

பொறியியல் துறையில் பெரிய அளவில் மேல்படிப்பு போதிப்பதற்கான வசதிகளுடன் **"இந்தியத் தொழில் நுட்பக் கழகம்"** மத்திய அரசினரால் கிண்டியில் அமைக்கப்பட்டு

நடைபெற்று வருகின்றது. மேற்கு ஜெர்மன் நிபுணர்களும் பேராசிரியர்களும் இந்த ஸ்தாபனத்தில் பணியாற்றி வருகின்றனர்.

தொழில் வளத்துக்குப் பட்டதாரிகள், டிப்ளமா உடையவர்கள் மட்டும் போதாது. பிட்டர், வெல்டர் போன்ற பல்வேறு கைப்பணியாளர்களும் வேண்டும். இத்தகையோருக்குப் பயிற்சி அளிப்பதற்கான நிலையங்களும் தமிழகத்தில் பல இயங்கி வருகின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 768 பேர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடிய வசதி இந்தப் பயிற்சி நிலையங்களில் இருந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் மேலும் 2400 பேர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான அளவிற்கு நிலையங்கள் திறக்கப்பட்டன.

# அடுத்தாற்போல என்ன ?

"என்ன, ராமசாமி, பார்த்தீர்களா ?"

"பார்த்தேன்—அடேயப்பா, இவ்வளவு பிரமாண்ட சாதனைகளா என்று மலைப்பு தட்டுகிறது !"

"பத்து வருடங்களில் பதினோராயிரம் ஆரம்பப் பள்ளிகள் ! 300 ஜனத்தொகைக்கு மேலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடம் !!"

"நாலரை லட்சம் மாணவர்கள் புதிதாக உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கிறார்களாம் !"

"தமிழ் நாட்டில், கடந்த பத்தாண்டுகளில் 17 புதிய கல்லூரிகள் ஆரம்பித்திருக்கிறார்களாமே, அதைக் கவனித்தீர்களா ?

"எல்லாவற்றையும் விட தொழில் கல்வியில் அடைந்துள்ள சாதனைகள்தான் எனக்குப் பிரமிப்பை ஊட்டுகின்றன !"

"புதியனவாக இரண்டு என்ஜினியரிங் கல்லூரிகளாம்; ஆயிரக்கணக்கான மாணவர்கள் கூடுதலாகப் படிக்கிறார்களாம்; 14 புதிய தொழில் பயிற்சிப் பள்ளிகளாம்—'அஸ்டானிஷிங்'காக இல்லை ?"

"என்னமோ என்று நினைத்தோமே; அப்படி ஒன்றும் காங்கிரசாட்சி சோடை போகவில்லை என்றுதான் தோன்றுகிறது."

"பிரமாதம் என்று சொல்லுங்கள் !"

—இது வரை தமிழகக் காங்கிரசார் ஆற்றியுள்ள பணிகளைக்கண்ணுறும் பாரபட்சமற்ற எவரும் இப்படி உரையாடல் நடத்திப் புகழ்மாலை சூட்டக்கூடும்.

தமிழகத் தலைவர்கள், கல்வித் துறையில், இந்தியாவே அதிசயிக்கும் வண்ணம், செய்து காட்டியுள்ள சில அற்புதங்களை இன்னமும் நான் பட்டியல் போட்டுக் காட்டவில்லை.

பொதுவாக, நிகழ்த்தப்பட்ட சாதனைகளையே இது வரை குறிப்பிட்டேன். அவை அத்துடன் முடிந்து போய் விடவில்லை.

இதுவரை செய்தவற்றைபற்றி அதிகமாக பெருமை கொள்ளாமல், அடக்க மனப்பான்மையோடு, மூன்றாண்டுத் திட்டத்தில் மேலும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் காங்கிரசுத் தலைவர்கள் திட்டமிட்டிருக்கின்றனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கல்வி அபிவிருத்திக்காக ரூ. 5. 4 கோடி ஒதுக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் ரூ. 12 கோடி செலவழிக்கப்பட்டது; மூன்றாவது திட்டத்தில் ரூ. 25.5கோடி செலவு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்கு முக்கிய நோக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

6 வயது முதல் 11 வயது வரை உள்ள எல்லா சிறுவர்களுக்கும் ஐந்தாம் வகுப்பு வரையில் கட்டாய இலவசக் கல்வியளிக்கும் திட்டம்;

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நடுத்தாப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட சிறுவர்களின் தொகைக்கு மேலாக 50 சதவிகிதம் உயர்த்தும் திட்டம்;

அதேபோல இரண்டாம் திட்ட இறுதியில் உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட சிறுவர்களின் தொகைக்கு மேலாக 50 சதவிகிதம் உயர்த்தும் திட்டம் ;

இரண்டாவது திட்டக் காலத்தில் துவக்கிய கல்விச் சீரமைப்பை முடித்தல்.

இவற்றை, இனி, ஒவ்வொன்ருகப் பார்ப்போம்.

ஆரம்பக் கலவியிலுள்ள முக்கிய திட்டம், மேலே குறிப்பிட்டாற்போல, **கட்டாய இலவசக் கல்வி** அளிப்பதாகும்.

அதோடு கூட அதிகப்படியாக 17 லட்சம் சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும். இதற்காக நமது மாநிலத்தை மூன்று மண்டலங்களாகப் பிரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் படிப்படியாக கட்டாய இலவசக் கல்விமுறை அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

கன்னியா குமரி மாவட்டத்தில் ஆரம்பப்பள்ளிகளை அபிவிருத்தி செய்வதும், 11 வயது முதல் 14 வயதுவரையுள்ள சிறுவரை அதிக அளவில் பள்ளியில் சேர்ப்பதும் ஆரம்பக் கல்வியின் மற்ற திட்டங்களாகும்.

3750 பள்ளிகள், மூன்ருவது திட்டத்தில், ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்படும்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி உயர்நிலைப்பள்ளிகளில் நிறைய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டி வரும். எட்டாவது முதல் பத்தாவது வகுப்புவரை ஒரு லட்சத்து முப்பதினுயிரம்மாணவர்களைச்சேர்க்கதிட்டமிடப்பட்டுள்ளது.

பத்தாவது வகுப்புவரை எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிப்பதுதான் மூன்ருவது திட்டத்தின் முக்கிய நோக்கம்.

200 உயர் நிலைப் பள்ளிகளை ரூ. 160 லட்சம் செலவில் உயர் இடைநிலைப் பள்ளிகளாக மாற்றுவது மற்ெருரு முக்கிய திட்டம் ஆகும். இதைத் தவிர, மூன்ருவது திட்டத்தில் இரு கூருக்கப்பட்ட 150 பாடமுறைகள் ஏற்படுத்தப்படும்,

**தமிழ்நாட்டில் ரூ. 30 இலட்சம் செலவில் பல்கலைக் கழகம் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தப் போகிருர்கள்.**

இதைத் தவிர அரசாங்க உதவிபெறும் கல்லூரிகளில் ஹாஸ்டல்கள் கட்டுவதற்காக மானியம் வழங்கப்படும்; மாகாணக் கல்லூரி வளர்ச்சிக்காக ஒரு குறிப்பிட்ட தொகை செலவழிக்கப்படும்; கோயம்புத்தூரிலுள்ள கலைக் கல்லூரியில் தமிழைப் போதன மொழியாக ஏற்படுத்துவதற்கான வசதிகளை அபிவிருத்தி செய்யவும் கணிசமான அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மற்ற கல்வித் திட்டங்களாவன : சிறுவர் பொருட் காட்சி சாலை அமைத்தல்; 300 நூல் நிலையங்கள் ஏற்படுத்தல் ; முதியோர் கல்விக் கூடங்கள் 500 துவக்குதல்.

தொழிற் கல்வியிலும் பல முன்னேற்றங்கள் திட்டமிடப் பட்டுள்ளன.

கோயம்புத்தூரில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள கால் நடை மருத்துவக் கல்லூரியில் வசதிகள் மேலும் பெருக்கப் படும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தியுள்ள வேளாண்மைக் கல்லூரி மேலும் விஸ்தரிக்கப்படும். இதைத் தவிர வேளாண்மைப் பயிற்சிக் கல்லூரியும் தொழில் புகுமுக வகுப்பு வேளாண்மைக் கல்லூரியும் ஏற்படுத்துவதற்காக கணிசமானதொரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கிராம பல்கலைக் கழகம் ஒன்று அமைக்க அடையாள ஏற்பாடாக ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கிராமப் பல்கலைக் கழகமா, என்று நண்பர்கள் ஆச்சரியப்படுவது தெரிகிறது. வளர்ந்து வரும் பாரதத்தில் இருக்கிறோம். நாட்கள் நகர நகர, மாதங்கள் மலர மலர, வருடங்கள் வளர வளர, நுணுக்கமான அறிவும் வளர்ந்து கொண்டே போக வேண்டியதுதானே முறை ?

மூன்றாவது திட்டத்தில் மூன்று பொறியியல் கல்லூரிகளும் 10 பல தொழில் பயிற்சிப் பள்ளிகளும் புதிதாகத் துவக்கப்படும்.

டிப்ளமா பெற்றவர்களுக்கு மேல்படிப்பு அளிப்பதற்கும், ஏ. எம். ஐ. ஈ. தேர்விற்குச் செல்வதற்காக அங்கீகரிக்கப் பட்ட பாடங்களைப் போதிப்பதற்கும் இரண்டு பலதொழில் பயிற்சிப் பள்ளிகளில் வழி செய்யப்படும். கிண்டியிலும் கோயம்புத்தூரிலும் உள்ள பொறியியல் கல்லூரிகளில் ஆறுவிசேட பாடங்களில் பட்டமேற்படிப்பு முறை ஏற்படுத்தப்படும்.

பிலிம் தொழிலில் முதன்மை இடம் வகிக்கும் சென்னை

யில் பிலிம் தொழில் நுட்ப வல்லுனர்களின் தேவை மிக அதிகமாக இருக்கிறது. டிப்ளமா அளவில், பிலிம் தொழிலின் சகல துறைகளிலும் பயிற்சியளிக்கும் பொருட்டு, ஒரு பிலிம் தொழிலியல் நிலையத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகள் மூன்ருவது திட்டத்தில் ஆரம்பிக்கப்படும் ஒரு புதிய திட்டமாகும். எட்டாவது வகுப்புவரை பொதுக் கல்வி படித்த பிறகு இந்தப் பள்ளிகளில் மூன்று வருடங்களுக்குப் பொறியியலும் கலையியலும் போதிக்கப்படும். மூன்ரும் திட்டத்தில் 24 ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகள் துவங்கப்படும்.

மூன்ருவது திட்டத்தில் புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி துவக்கப்படும். இதைத் தவிர ஒருங்கிணைந்த மருத்துவக் கல்லூரி எம். பி. பி. எஸ் கல்லூரியாக மாற்றப்படும் : தற்போதுள்ள மருத்துவக் கல்லூரி சீரமைக்கப்படும்.

சென்னை மருத்துவக் கல்லூரி ஒரு பிராந்திய பட்ட மேற்படிப்பு நிலையமாக தரம் உயர்த்தப்படுகிறது.

தமிழகத்தில் தற்போது தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றில் கைப்பணியாளர்களாகவும், பிட்டர்களாகவும், வெல்டர்களாகவும் மாணவர்கள் பயிற்சிபெறுகிருர்கள். மூன்ருவது திட்டத்தில்மேலும் 8 தொழில்பயிற்சிநிலையங்கள் துவக்கப்படும்.

# பகல் உணவுத் திட்டம்

ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு.

சென்னை நகரில் எனது தாத்தா பள்ளிக்கூட தலைமை ஆசிரியராக இருந்து வந்தார். சென்னையில், குறிப்பாக வட சென்னையில், அவருக்கு நல்ல செல்வாக்கு. பள்ளிக்கூடத்துக்கு வந்தபிள்ளைகளில் பலர் சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாத ஏழைகள். அதனல் இடையிடையே பள்ளியைவிட்டு நின்று விடுவார்கள். எங்கேனும் நான்கணு கூலிக்கு வேலை கிடைத்தால் அதுவே சுவர்க்கம் என்று எண்ணி பள்ளிக்கு மட்டம் போட்டவர்களும் உண்டு.

இந்தப் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் காணவேண்டும் என்ற நோக்கத்தோடு தலைமை ஆசிரியர் பல பிரமுகர்களைச் சந்தித்தார்; அவர்களுடன் கலந்தாலோசித்தார். அதன் பலனுக "வாரச் சாப்பாடு" திட்டம் உருவாயிற்று.

சாப்பாட்டிற்கு வசதியில்லாத மாணவர்களுக்குச் சாப்பாடு போட சில பெரிய மனிதர்கள், தலைமை ஆசிரியர் உட்பட, முன் வந்தார்கள். ஆனல் எல்லா ஏழை மாணவர்களுக்கும் வாரம் பூராவும் சாப்பாடு போடுவது என்ருல் சிரமமாக இருக்குமல்லவா. அதனல், வாரத்துக்கு ஒருநாள் 10 பிள்ளைகளுக்குச் சாப்பாடு இலவசமாக அளிக்க ஒருவர் முன் வந்தார்; இப்படி ஏழுபேர்கள் ஏற்பாடு செய்யப்பட்டார்கள்—பத்து பிள்ளைகளுக்கு எப்போதும் சாப்பாடு கிடைக்க வழி செய்யப்பட்டது.

இதுபோல இன்னெரு 'செட்'; அடுத்தாற்போல வேரெரு 'செட்', இப்படியாக சுமார் 200 பிள்ளைகளுக்கு எப்போதும் இலவச சாப்பாடு கிடைக்க ஏற்பாடு செய்து விட்டார் தலைமை ஆசிரியர்.

சமீபத்தில் மறைந்துபோனவரும், சென்னை மாகாணத்தின் மிகச் சிறந்த வழக்கறிஞர் என்றுபெயரெடுத்தவருமான ஒருவர் "வாரச் சாப்பாடு" சாப்பிட்டு வளர்ந்தவர்தான்!

ஆம்; ஏழைகளிடையே வழக்கறிஞர்கள் தோன்றக் கூடும்; விஞ்ஞான மேதைகள் பிறக்கக்கூடும்; வரலாற்றையே மாற்றியமைக்கக்கூடிய அரசியல் அறிஞர்கள் உதிக்கக் கூடும்; நாட்டின் பொருளாதார வளத்திற்கு மிகவும் தேவையான பொறியியல் வல்லுனர்களும் தொழில் விற்பன்னர்களும் உண்டாகக்கூடும்.

ஆனல்—

ஏழ்மையின் காரணமாக அவர்களில் பலர் தோன்றியும் தோன்ருமல் போகிருர்கள்; பிறந்தும் பிறர்க்குத் தெரியாமல் மறைந்து போகிருர்கள்.

"பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்கிருர்களே, அந்தப்பத்திலே கல்வியும் ஒன்ருக இருக்கவேண்டும் என்று கருதுகிறேன். பசிக் கொடுமையின் காரணமாக கல்வியைத் துறப்பவர்களின் பட்டியலை உலகம் பூராவும் எடுத்தால் இந்தியா முதலிடம் பெறும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை!

உணவுப் பிரச்னையின் காரணமாக கல்வியறிவு தடைப் படுதலைக் காங்கிரசுத் தலைவர்கள், குறிப்பாக தமிழக ஆட்சியாளர், தீவிரமாகச் சிந்தித்தார்கள். "எல்லோருக்கும் கல்வி" என்ற இலட்சியத்தைக்கொண்ட காங்கிரசார் இந்தத் தடைக்கல்லை உடைத்து நொறுக்குவதற்காக துவங்கியது தான் "**பகலுணவுத் திட்டம்.**"

ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொண்ட முக்கியமான திட்டங்களுள் இலவச பகல் உணவுத் திட்டமும் ஒன்ருகும். படிக்கும் குழந்தைகள் தமது உணவினைப்பற்றிக் கவலைப்படாமல் படிப்பில் சிரத்தை காட்ட வேண்டுமென்பதே இத்திட்டம் கொண்டு வரப்பட்டதின் நோக்கமாகும். எதிர்பார்த்ததற்கு மேலாக இத்திட்டத்தின் மூலம், அதிகமான அளவிற்கு

ஏழைக் குழந்தைகளைப் பள்ளியில் கொண்டுவந்து சேர்க்க முடிகிறது.

அரிஜன் நலப்பள்ளிகளில் அரிஜன குழந்தைகளுக்கு இலவச மத்தியான உணவு வசதி ஏற்கெனவே இருந்து வருகிறது.

1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து தமிழக அரசினர் இத்திட்டத்திற்காக நிதி உதவி அளித்து வருகிறார்கள். இத்திட்டத்தின் முக்கியமான அம்சம் ஆங்காங்குள்ள பொது மக்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெற்று இதனை நடத்த வேண்டும் என்பதாகும். ஒருவேளை உணவுக் குப்பிடிக்கும் செலவாகிய 10 ந. பை. வில் அரசாங்கத்தாரால் 6 நயாபைசாவும் பொதுமக்களால் 4 நயாபைசாவும் கொடுக்கப்படும். பொதுவாக இம்முறையில் நடந்தாலும் 840 அரிஜன பள்ளிக்கூடங்களில் படிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் பிடிக்கும் முழுச் செலவும் அரசாங்கத்தாராலே கொடுக்கப் படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலும் இதே முறைதான்.

சாதாரணமாக, முன்றில் ஒரு பங்கு மாணவர்களுக்கு பகல் உணவுத்திட்டத்தின் மூலம் உணவு அளிப்பது அவசியமாகிறது. இரண்டாவது திட்ட இறுதியில் சுமார் 11 இலட்சம் குழந்தைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் உணவளிக்கப்படும்.

மூன்ருவது ஐந்தாண்டுத்திட்ட முடிவுக்குள் எல்லா பள்ளிக்கூடங்களிலும் பகலுணவுத் திட்டம் செயல்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. புதியதாக சேர்க்கப்பட விருக்கும் குழந்தைகள் உட்பட சுமார் 17 இலட்சம் மாணவர்களுக்கு மூன்ருவது திட்ட முடிவுக்குள் பகலுணவு அளிக்கப்படும்.

இரண்டாவது திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு மேல் அதிக அளவு மாணவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது போல் மூன்ருவது திட்டத்திலும் நடைபெறலாம்—அதாவது 17 இலட்சம் மாணவர்களுக்கு மேலாகவும் இத் திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

தமிழக காங்கிரசு அரசினரின் பகலுணவுத் திட்டத்தைக் குறித்து நாம் எல்லோரும் பெருமை கொள்ளலாம்; இந்தியாவில் இந்த உன்னதமான—உயர்ந்த—திட்டத்தை முதன் முறையாகக், கொண்டுவந்து சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறுர்கள் அல்லவா?

"பள்ளிக் குழந்தைகளுக்குப் பகல் உணவுத் திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத புதுமை; அதைத் தமிழ் நாட்டில்தான் காண்கிறேன்; ஏழைக் குழந்தைகளின் தற் குறித்தனம் அற்றுப்போகும் என்பது என் நம்பிக்கை" என்று நமது மதிப்பிற்குரிய தலைவர் நேரு அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி கூறியுள்ளார்.

ஆசிரியர்களின் சார்பாக தமிழ்நாடு சட்ட மன்றத்தில் அங்கம் வகிப்பவரும் கல்வித்துறையில் சிறந்த அனுபவ சாலியுமான திரு. டி. பி. சீனிவாசவரதன் அவர்கள் 18-3-60ந் தேதி தமிழ்நாடு மேல் சட்டசபையில் உரையாற்றுகையில் பகல் உணவுத் திட்டத்தைத் தாம் வரவேற்பதாகவும், இங்கிலாந்தில் பகல் உணவு எல்லா குழந்தைகளுக்கும் அளிக்கப் படுவதாகவும் தெரிவித்து, பாராட்டினுர்.

"என்னப்பா, உங்கள் திட்டத்தை பண்டித நேரு மெச்சிவிட்டார் என்று சொன்னுல் போதுமா? தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரேனும் இதைப்பாராட்டி இருக்கிறுர்களா? இருந்தால் சொல்லேன் பார்ப்போம்!—" இப்படி, எதனையும் எளிதில் நம்பமறுக்கும் ஒருவர் கேட்கக் கூடும். அத்தகையோருக்கும் பதில் சொல்லத்தான் வேண் டும்.

> "பள்ளிகளிலே நண்பகலுணவு தரவேண்டும் என்று ஒரு திட்டத்தைக்கொண்டு வந்தார்கள் அரசினர்; அந்தத் திட்டத்தில் இந்திய துணைக்கண்டம் முழுவதும் சுற்றிவருகின்ற நம் நிதியமைச்சருக்குக் கூட தெரியும், தமிழகம் மட்டும்தான் மகத்தான **வெற்றியை அடைந்திருக்கிறது.**

—இப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் திரு: அண்ணுதுரை அவர்கள் கடந்த 29-1-61 அன்று சென்னை அவ்வை இல்லத்தில் பேசியபோது, வியந்து பாராட்டி இருக்கிருர். (இச் செய்தி தி. மு. க. தினசரியான "முரசொலி"யில் பிரசுரிக்கப்பட்டது.)

வசிஷ்டர் வாயாலே பிரம்மரிஷி என்ற பட்டத்தை விசுவாமித்திரர் பெற்றதாகச் சொல்லுவார்களே, அதுபோல திரு. அண்ணுதுரை அவர்களே, கட்சி மாச்சரியத்தையும் மறந்து, புகழ்ந்துவிட்டார் என்ருல், இதற்கு மேல் நான் எதுவும் குறிப்பிடத் தேவையில்லை என்று கருதுகிறேன் !

# தாழ்ந்த தமிழகம் தலை நிமிர்ந்தது!

சமுதாயத்தில் பின் தங்கியுள்ளவர்களுக்கும் கல்வி அறிவு ஏற்பட வேண்டும்; அப்போதுதான் அவர்களும் முற்போக்கான வகுப்புகளுக்குச் சமமான நிலையை அடைய முடியும். பலவீனமான இளைஞனைப் பலசாலி ஒருவனோடு குத்துச் சண்டைக்கு விடுவது முறையன்று. அவன் உடல் வலிமைபெற ஏற்பாடுகள் செய்து, பிறகுதான் போட்டிக்கு விட வேண்டும். இதே கருத்தை ஒட்டித்தான் பின் தங்கியுள்ள வகுப்பினருக்குப் பல|சலுகைகள், கல்வித் துறையில், தரப்படுகின்றன—மெல்ல,மெல்ல, அவர்கள் உயர்வடைந்து வருகிறார்கள்.

பின் தங்கிய வகுப்பினர்களுக்குத் தனிப்பள்ளிகள் நடத்தப் படுகின்றன. தற்போது 840 அரிஜன நலப்பள்ளிகள் உள்ளன. அவற்றில் சுமார் 75,000 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.

ஏற்கெனவே குறிப்பிட்டாற்போல அரிஜன மாணவர்களுக்கு இலவச பகல் உணவு அளிக்கப்படுகிறது. பொதுப் பள்ளிகளில் ஒரு வேளை உணவிற்கு 10 ந. பை. செலவாகிறது என்று குறிப்பிட்டேன். அரிஜன பள்ளிகளில் ஒருவேளை உணவுக்கு 15. ந. பை. செலவாகிறது. அச்செலவு பூராவும் அரசாங்கமே கொடுத்து வருகிறது.

தற்போது 300 அரிஜன ஹாஸ்டல்கள் இருக்கின்றன. இவற்றில் 18,400 மாணவர்கள் தங்கியுள்ளார்கள்.

அரிஜன மாணவர்களுக்கு உபகாரச்சம்பளங்கள், பள்ளிக்கட்டணங்கள் ஆகியவற்றுக்காக ரூ. 27·5 இலட்சம் செலவிடப்படுகிறது.

மூன்ருவது திட்டத்தில் அரிஜன நலப்பள்ளிகள் விஸ்தரிக்கப்படும்; உபகாரச்சம்பளங்கள் மேலும் பலருக்கு வழங்கப்படும். 3 கோடி ரூபாய் செலவில் ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் அரிஜனப் பெண்களுக்கு தலா ஒரு ஜோடி துணிகள் வீதம் வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு சட்ட மன்றத்தில் 25-2-61ந் தேதியன்று பட்ஜெட் உரை நிகழ்த்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், "கல்வித் துறையில், சம்பளச் சலுகைகள் கொடுத்தும், இலவச உணவு வசதிகள் செய்து கொடுத்தும், மாணவர்கள் கல்வியறிவு பெறுவதற்கான வசதியளித்து வந்திருக்கிரேம். 30,000-க்கு மேற்பட்ட அரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் தற்போது இந்தச் சலுகைகளைப் பெற்று வருகின்ருர்கள்" என்று குறிப்பிட்டார்.

(1) கிறிஸ்தவர்களில் பின் தங்கிய வகுப்பினருக்குச் சலுகைகள் தரப்படுவதில்லை என்ற புகார் முன்பு இருந்தது. இப்போது கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய மாணவர்களுக்கும் கல்விச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

(2) சலவையாளர், நாவிதர் ஆகிய வகுப்புகளும் பின்தங்கிய வகுப்புகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கும் கல்வியின் எல்லா மட்டங்களிலும் சம்பளச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இந்த விபரத்தை 10-4-54 அன்று சட்ட மன்றத்தில் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்தார்.

(3) விரிவுபடுத்தப்பட்ட பள்ளிகளின் மாணவர் உட்பட அரிஜன பள்ளிமாணவர்களுக்கு வழங்கப்படும் பலகைகள் புத்தகங்கள் ஆகியவற்றின் செலவு உறுதி செய்யப்பட்ட செலவாகக் கருதப்படும்.

(4) புறக்கண் உள்ளவர்களுக்கே கல்வியறிவு என்னும் அகக்கண் தெரியவில்லை என்பதை ஆரம்பத்திலேயே பார்த்தோம். அவர்களது அகக்கண்களைத் திறக்கும் பணி

யில் காங்கிரசு அரசினர் ஈடுபட்டு இருப்பதையும் பார்த்துக் கொண்டு வருகிறோம் புறக்கண்களே இல்லாதவர்களின் நிலை என்ன? அவர்களுக்கு அகக்கண்கள் மிகமிக அவசியம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

**குருடரும், செவிடரும், ஊமையரும் கல்வி கற்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே வகைசெய்யப்பட்டது.** பூந்தமல்லியிலுள்ள குருடர் பள்ளியில் 4-வது படிவத்திலிருந்து 6-வது படிவம்வரை வகுப்புகள் துவக்கப்பட்டுள்ளன. சேலத்திலும் பூந்தமல்லியிலும் குருடர் பள்ளிக்கான கட்டிடங்கள் கட்டப் பட்டன. பூந்தமல்லி குருடர் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பள்ளி ஒன்றும், தேனாம்பேட்டை செவிடு, ஊமையர் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பள்ளி ஒன்றும் துவக்க திட்டமிடப்பட்டது. மூன்றாவது திட்டத்தில் ஊனமடைந்தவர் களுக்குக் கல்வி வசதிக்காக ஏற்பாடு செய்ய ஒரு கணிச மான தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

(5) சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள பலவீனமான வர்கள், கல்வித்துறையில், வளம்பெற்று முன்னேற்றம் அடைந்த வகுப்பினரோடு சமமாக நிற்பதற்காக செய்யப் பட்டு வருகின்ற ஏற்பாடுகளை மேலே கண்டோம். இவற்றிலே மிகமிகமுக்கியமானது **இலவசகல்வியளிக்கும்திட்டம்.**

தற்போது ஷெட்டியூல்ட் சாதியினர், மலை சாதியினர், மிகப் பின்னிலை வகுப்பினர், இவ்வகையில் இருந்து மதம் மாறியவர்கள், குற்றப் பட்டியலில் இருந்து விலக்கப்பட்ட சாதியினர், ஏழை அரசியல் தியாகிகள் மக்கள், என். ஜி. ஓ. உத்தியோகஸ்தர்களின் பிள்ளைகள், ஆரம்ப ஆசிரியர்களின் பிள்ளைகள் ஆகியோருக்கு முழுச்சம்பள சலுகைகள் 6-வது படிவம்வரை கொடுக்கப்படுகிறது.

மற்றபடி 5-வது வகுப்புவரை இலவசமாக அனைவருக் கும் கல்வியளிக்கும் திட்டம் இப்போது அமுலில் இருந்து வருகிறது. 8-வது வகுப்புவரை ஏழை மாணவர்களுக்குச் சம்பள விலக்கு கொடுக்கப்படுகிறது.

இந்தச் சலுகைகள் சாதி அடிப்படையில் இல்லாமல், பொருளாதார அடிப்படையில் அமையவேண்டும் என்ற கருத்து சிலகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்து இருக்கிறது.

**அந்த அடிப்படையில் 11-வது வகுப்புவரை எல்லா ஏழை மாணவர்களுக்கும், சாதி, சமய வேறுபாடின்றி இலவச கல்வி கொடுபபதென அரசாங்கம் முடிவு செய் துள்ளது.** இச்சலுகையின் காரணமாக ஆண்டொன்றுக்கு 58 இலட்சம் ரூபாய் அதிகச்செலவு ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டு, அதற்கான நிதியும்ஒதுக்கப்பட்டுள்ளது. தகுதிபெற்ற மாணவர்கள் யாராக இருந்தாலும் வறுமையின் காரணமாகக் கல்விபெற முடியவில்லை என்ற நிலையை நீக்குவதில் காங்கிரசு அரசினர், எடுத்திருக்கும் முடிவு முதற்படியாகும்.

—தமது பிள்ளைகளுக்குப் பொருளாதார வசதிக்குறைவின் காரணமாகக் கல்வி கற்பிக்க முடியவில்லையே, என்று திண்டாடிக்கொண்டிருந்த இலட்சக்கணக்கான பெற்றோர்கள், நிதியமைச்சர் அவர்களின் இந்தக் கரும்புச் செய்தியைக் கேள்விப்பட்டதும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை!

நன்றியுணர்வு மிக்க தமிழ் மக்கள், தலைவர்கள் காமராஜ், சுப்பிரமணியம் ஆகியோரை என்றும் மறக்கமாட்டார்கள்.

# சீரமைப்பு

மற்ற மாநிலங்கள் பார்த்துப் பின்பற்றத்தக்க அளவில் தமிழக காங்கிரசு அரசினர், கல்வித்துறையில், பல சாதனை களைப் புரிந்துள்ளனர் என்பதைப் பார்த்தோம்.

இரண்டாவது திட்டக்காலத்தில் "**பள்ளிச்சீரமைப்புத் திட்டம்**" மேற்கொள்ளப்பட்டது. இது சுய தேவை பூர்த்தி அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டதாகும். தத்தம் ஊரிலுள்ள பள்ளிகளின் வளர்ச்சிக்காக பொதுமக்கள் தாங்களே முன் வந்து நிதி திரட்டுவதும், அதைக்கொண்டு பள்ளிகளுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுப்பதுமே இதன் நோக்கம். தங்களுடைய குழந்தைகள் சிறந்த முறையில் கல்வி கற்க வேண்டுமென்றும், அதற்கேற்ற முறையில் எல்லா வசதி களும் பள்ளிக்கூடத்தில் அமையவேண்டுமென்றும் பெற் றோர்கள் விரும்புகின்றார்கள். எனவே பள்ளிச் சீரமைப்பு திட்டத்திற்கு அவர்களாக முன்வந்து உதவி செய்கிறார்கள். அதற்கு அரசாங்கத்தினிடமிருந்து சகலவிதமான ஆதரவும் வழங்கப்படுகிறது.

இதுவரை சுமார் ரூ. 3.79 கோடி அளவிற்குப் பணமாக வும், பொருளாகவும் உதவியுள்ளார்கள். இந்த இயக்கம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கான பள் ளிக்கூடங்கள் இதனால் பயன் அடைந்துள்ளன.

* * *

**ஆசிரியர்கள்** எந்த அளவிற்கு நல்ல முறையில் பணி ஆற்றுகின்றார்களோ அந்த அளவிற்குத்தான் கல்வி வெற்றி பெற முடியும். ஆசிரியர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக **அவர்களுக்குப் பல சலுகைகள்** அளிக்கப் பட்டு வந்துள்ளன.

(1) அவர்களுடைய சம்பளம் கீழ்க்கண்டவாறு அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

| | விபரம் | பழைய சம்பளம் | புதிய சம்பளம் |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர் (லோயர்) | ரூ. 59 | ரூ. 65 |
| 2. | ஆசிரியர் (ஹையர்) | ,, 66 | ,, 75 |
| 3. | ஆசிரியர் (செகண்டரி) | ,, 84 | ,, 100 |
| 4. | ஆசிரியர் (பி. டி. பட்டதாரி) | 126 | ,, 150 |

மேலே குறிப்பிடப்பட்டிருப்பது ஆரம்ப சம்பளம். இத்துடன் சம்பள உயர்வு உண்டு. வீட்டு வாடகை அலவன்சு வேறு உண்டு.

(2) 1955-ஏப்ரல் மாதம் முதல் பிராவிடண்ட் பண்ட், இன்ஷ்யூரன்ஸ், பென்ஷன் ஆகிய மூவகை அனுகூலம் அளிக்கும் திட்டம் ஆசிரியர்களுக்காக அமுலில் இருந்து வருகிறது. உள்ளூர் ஆட்சி மன்றங்கள் கீழ் உள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும், உயர்நிலைப்பள்ளிகளில் இதே தரத்திலுள்ள ஆசிரியர்களும் இத்திட்டத்தினல் பயன்பெறுகிறார்கள்.

**இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் ஆசிரியர்களுக்கு, மேலே குறிப்பிடப்பட்ட மூவகை அனுகூலங்கள் அளிக்கப்படவில்லை.**

(3) ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரது குழந்தைகளுக்கு எஸ். எஸ். எல். சி. வரை இலவசக் கல்வி முறையே, 1957, 58 ஆண்டுகளில் இருந்து அளிக்கப்பட்டு வருகிறது.

* * *

பிரதேச மொழியிலே கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுவது. இப்போது உயர்நிலைக் கல்விவரை பிரதேச மொழியிலே போதிக்கப்படுகிறது. கல்லூரியிலும் பிரதேச மொழியே போதன மொழியாக இருக்கவேண்டும் என்ற கருத்து அறிஞர் பலரால் சமீபகாலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

தமிழ் மொழிதான் கல்வியின் எல்லா மட்டங்களிலும் போதனு மொழியாக இருக்கவேண்டுமென்பதைக் காங்கிரசுத் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழ்மொழி வளர்ச்சிக்காக எல்லாவிதமான முயற்சிகளையும் திட்டமிட்டுச் செய்வதற்காக "தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக்குழு" ஒன்றை அரசினர் நியமித்துள்ளனர். தமிழ் மூலமாக பி. ஏ. வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு எடுத்து இருக்கிறது. கோயம்புத்தூரிலுள்ள சர்க்கார் கலைக் கல்லூரியில் பரீட்சார்த்தகரமான முறையில் பி. ஏ. வகுப்பில் தமிழ்மொழி பாடமொழியாக்கப்பட்டுள்ளது. கல்லூரித் தமிழ்க் குழுவினரின் முயற்சியின் பயனுக தமிழிலே பல பாடப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன.

1963-64-ல் இருந்து எல்லா கல்லூரிகளிலும் பி. ஏ. வகுப்புகளில் தமிழ்மொழி மூலம் பாடம் சொல்லிக்கொடுக்க ஆரம்பம் செய்யவேண்டும் என்று தலைவர்கள் முடிவு செய்திருக்கிருர்கள்.

தமிழ், போதனு மொழியாக ஆக்கப்படுவதால் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை நாம் இழந்துவிடுவதாக அர்த்தமில்லை. உலக மொழியாகிய ஆங்கிலத்தையும் நம்முடைய மாணவர்கள் நல்ல முறையில் கற்பதற்கான வசதிகள் செய்வது மிகவும் அவசியம். இதனை நமது தலைவர்கள் உணர்ந்தே இருக்கிருர்கள். அதற்காக கீழ் வகுப்புகளில் இருந்தே ஆங்கிலத்தைச் சொல்லிக்கொடுக்க வழி செய்யப்பட்டு இருக்கிறது.

# நன்றியுள்ள தமிழகம் மறக்காது!

ஆசிரியரும் வாசகரும் சந்திக்கிறார்கள்—

"என்ன சார், படித்தீர்களா ?"

"புத்தகத்தைத்தானே குறிப்பிடுகிறீர்கள் ? இப்போது தான் படித்து முடித்தேன் :"

"உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டும் !"

"என்ன சொல்லச் சொல்கிறீர்கள் ?"

"பாராட்டத்தக்க முயற்சி என்கிறீர்களா ?"

"இல்லை"

"சாதனைகளைத் தெளிவாகப் பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறேன், என்கிறீர்களா !"

"அப்படியும் சொல்லமாட்டேன் !"

"கல்வியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்கு ஒரு சபாஷ் போடுகிறேன், என்பீர்களோ ?"

"அதுவும் இல்லை!"

ஆசிரியரின் முகம் சுருங்குகிறது.

"அப்படியென்றால் ?"

**பதின்மூன்றாண்டுக் கால** காங்கிரசாட்சியில், கல்வித் துறையில், இவ்வளவு பிரமிக்கத்தக்க, பிரம்மாண்டமான—ஈடு இணையற்ற—சாதனைகள் நடந்திருக்கும் என்று, என்னால் நம்பவே முடியவில்லை, ஆசிரியர் அவர்களே, நம்பவே முடியவில்லை ! ஆகவே எப்படி பாராட்டுவது என்று தெரியாமல், பொருத்தமான புகழ் மொழிகள் ஏதும் கிடைக்காமல், திண்டாடுகிறேன் !!

ஆசிரியருக்கு ஒரே மகிழ்ச்சி ; ஏற்கெனவே வாட்டசாட்டமான அவர், மேலும், பூரிப்புக் காரணமாக, ஒருசுற்று பெருக்கிறார்.........

"பொல்லாதவரய்யா நீங்கள்! என்னைத் திகைக்க வைத்துப், பின்னர் இன்பத்தில் திளைக்க வைத்துவிட்டீர்களே!"

வாசகர், உடனே, பதில் கூறவில்லை; அவரது உதடுகளிலிருந்து புன்னகை இன்னமும் மறையவில்லை......

"போகட்டும், காங்கிரசாட்சியின் கல்வித்துறைச் சாதனைகளைப் படித்தீர்களே. அவற்றிலே எது உங்களை மிகவும் கவர்ந்தது என்று சொல்ல முடியுமா?"

"எதைச் சொல்லுவேன், எதைச் சொல்லாமல் விடுப்பேன்? பகலுணவுத் திட்டம் இந்தியாவுக்கே வழிகாட்டியாய் விளங்குகிறதே அதைப் பாராட்டுவதா? கல்விச் சீரமைப்புத் திட்டம், கல்வித்துறையிலேயே முழுமையான ஜன நாயகத்தைக் காட்டி 'மக்களுக்காக திட்டம்; திட்டம் வெற்றிபெற மக்கள்' என்ற தத்துவத்தை நிதரிசனமாகக் காட்டியிருக்கிறதே, அதைப் புகழ்வதா? 26,700 ஆரம்பப் பள்ளிகள் தமிழ்நாடு பூராவும் உள்ளன என்ற சேதியைக் கேட்டு, அதனை மெச்சுவதா? பதினேழு புதிய கல்லூரிகள், இரண்டு பொறியியல் கல்லூரிகள், மூன்று மருத்துவக் கல்லூரிகள் ஒரு வேளாண்மைக் கல்லூரி, பதினான்கு பல தொழில் பயிற்சிப் பள்ளிகள்—இவையெல்லாம் தமிழகத்தில் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன என்று பட்டியல் தந்தீர்களே, அதனை வியந்து போற்றுவதா? எல்லாவற்றையும் மிஞ்சுவது போல "பத்தாவது வகுப்புவரை இலவசக் கல்வி" என்ற அமைச்சரின் அமுத மொழிகளைக் குறிப்பிட்டீர்களே, அதைப் புகழ்வதா?—எதைத் தொடுவது, எதை விடுவது, என்று தெரியாமல் திண்டாடுகிறேன்!"

"திண்டாடுங்கள், நன்ருகத் திண்டாடுங்கள். தலைவர்கள் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்ய திட்டமிட்டிருக்கிருர்களே, அவை உங்களை மேலும் திண்டாட வைக்கும் என்பதில் ஐயமில்லை"

"செயற்கரிய செய்வார் பெரியார், என்பார்கள். காங்

கிரசுத் தலைவர்களை அப்படி அழைக்க வேண்டும்போலத் தோன்றுகிறது !"

"உங்கள் விருப்பத்திற்குத் தடையேது ?.........இப்போது நீங்களும் சொல்லுவீர்கள் என்று கருதுகிறேன், காங்கிரசாட்சியில் கோடானுகோடி மக்களின் அகக் கண்கள் திறந்தன, என்பதை !"

"அதைமட்டுமா சொல்லுவேன் ? ஆசிரியர் அவர்களே, இந்தப் புத்தகத்தைப் படித்து முடிக்கின்ற வரையில் எனக்கே தெரியாது இவ்வளவு சாதனைகள் செய்யப்பட்டுள்ளன என்று; ஆகவே என் போன்றோர்க்கும் இப்போதுதான் உண்மை தெரிந்தது."

"வணக்கம், போய்வருகிறேன்.!"

"நன்றி, போய்வாருங்கள்!"

* காங்கிரசின் இலட்சிய விளக்கம்;
* காங்கிரசாட்சியில் நடைபெறும் சாதனைகள்;
* எதிர்க்கட்சிகளுக்குத்தக்க பதில்கள்—

ஆகியவற்றைக் கொண்ட நூல்கள்:

## "வேலூர் காட்டிய வழி"

வேலூர் நகரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூடியபோது தலைவர்கள் காமராஜ், பக்தவத்சலம், சுப்பிரமணியம், அளகேசன் ஆகியோர் நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்பு படைத்த சொற்பொழிவுகளின் தொகுப்பு.

54 பக்கங்கள். விலை 20 ந.பை. தபால்மூலம் 28 ந.பை.

## "தழைக்கின்ற தமிழ்நாடு"

(பி. ஸ்ரீ.)

"என்ன செய்தார்கள் காங்கிரசார்?" என்பார்க்கு, "இவை இவை செய்தார்!" என்று விளக்கிடும் நூல். அழகிய வண்ண அட்டை நூலுக்கு அணி செய்கிறது.

78 பக்கங்கள். விலை 25 ந.பை. தபால்மூலம் 36 ந.பை.

## "காங்கிரசாட்சியிலே கைத்தறியாளர்கள்!"

(திரு. கருப்பையா பி.ஏ.,)

கடந்த பதின்மூன்றாண்டுகளாகக் கைத்தறியாளர் பெற்ற பலன்களையும், இனிப் பெறவிருக்கும் நன்மைகளையும் தெளிவாக விளக்கும் நூல். அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் முன்னுரை வழங்கியிருக்கின்றார்.

32 பக்கங்கள். விலை 10 ந.பை. தபால்மூலம் 18 ந.பை.

## "சுதந்திர இந்தியா"

(பி. ஸ்ரீ.)

நமது வரலாறு பற்றிய சிறந்த, தெளிந்த, அடிப்படை விளக்கம். அழகிய வண்ண அட்டையுடன் கூடியது.

96 பக்கங்கள். விலை 30 ந.பை. தபால்மூலம் 44 ந.பை.

50 புத்தகங்களுக்கு மேல் வாங்குவோருக்கு 25 சதவிகிதம் கமிஷன் தரப்படும். தபால் செலவு தனி.

விவரங்களுக்கு:

நிர்வாகி,

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி**

111, மவுண்ட்ரோடு, சென்னை-6.